# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.154/2019

**2025 ஆம்** வருடம் ஜுன் மாதம் 25 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேசுராஜ் | ஜாதி | : | |
| த.பெ | : | மதலைமுத்து | தொழில் | : | நர்சிங் கார்டன் தொழில் |
| கிராமம் | : | வெள்ளோடு பிரிவு, ஆலமரத்துப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 61/2025 |
| தேதி | : | 25.06.2025 | | | |

**<u>3 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>**

ஆத்தூர் தாலுகா, ஆலமரத்துப்பட்டி கிராமம் சர்வே எண்.207/1B க்கு கட்டுப்பட்ட 1 ஏக்கர் 19 செண்ட் நிலம் ஆதியில் செம்புலிங்கம் செட்டியர் என்பவருக்க பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன 1 ஏக்கர் 19 செண்ட்டில் 45 செண்ட் மட்டும் 22.02.1956 அன்று பழனிவேல் செட்டியாரிடம் இருந்து செம்புலிங்கம் செட்டியர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் உங்களது தரப்பு ஆவணமாக வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்சொன்ன 1 ஏக்கர் 19 செண்ட்டில் 74 செண்ட்டை மட்டும் 02.09.1957 அன்று சின்னம்மாள் என்பவரிடமிருந்து செம்புலிங்கம் செட்டியர் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தை உங்கள் தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

செம்புலிங்கம் செட்டியாரின் பேரன்கள் தான் இவ்வழக்கின் 1 ஆம் பிரதிவாதி தர்மராஜ் மற்றும் 2 ஆம் பிரதிவாதி முருகேசன் என்றால் சரிதான். செம்புலிங்கம் செட்டியாரின் வாரிசுகள் 04.09.1974 அன்று 1 ஏக்கர் 19 செண்ட்டில் 2 செண்ட்டை மட்டும் கைவசம் வைத்துக்கொண்டு மீதமுள்ள 1 ஏக்கர் 17 செண்ட் நிலத்தை ஆறுமுகம் செட்டியார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன்பிறகு ஆறுமுகம் செட்டியார் சர்வே எண்.207/1B இல் அரை செண்ட் நிலத்தை மட்டும் 30.06.1991 ஆம் தேதி சவரியார் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

ஆறுமுகம் செட்டியர் இறந்தபிறகு சர்வே எண்.207/1B இல் 4 செண்ட் நிலத்தை ஆறுமுகம் செட்டியாரின் வாரிசுகள் 25.11.1996 ஆம் தேதி 1, 2 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள், அவ்வாறு அவர்கள் கொடுத்தது 45 செண்ட்டில் இருந்து தான் கொடுத்துள்ளார்கள். சர்வே எண்.207/1B இல் ஆறுமுகம் செட்டியாரின் வாரிசுகளிடமிருந்து 1 ஏக்கர் 12 1/2 செண்ட் நிலத்தை 19.04.1999 அன்று நீங்கள் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரைய ஆவணத்தை உங்களது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

எனவே, ஆறுமுகம் செட்டியார் கிரையம் பெற்ற 1 ஏக்கர் 17 செண்ட் நிலத்தை ஆறுமுகம் செட்டியாரும், அவருடைய வாரிசுகளும் கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். உங்களுடைய கிரைய ஆவணத்தில் சர்வே எண்.207/1B இல் 1 ஏக்கர் 12 1/2 செண்ட் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.207/1B என்பது 1996-1997 ஆண்டுகளிலேயே சர்வே எண்.207/1B1 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், பட்டா மட்டும் தவறுதலாக கொடுக்கப்பட்டது. உங்கள் கிரைய பத்திரம் நான்கு எல்லையாக பழனிவேல் செட்டியர் புஞ்சை தோட்டத்திற்கும் வடக்கு என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

1, 2 பிரதிவாதிகளான தர்மராஜ், முருகேசன் ஆகியோர்கள் கிரையம் பெற்ற சொத்தையும், ஏற்கனவே அவர்களிடமிருந்த 2 செண்ட் இடத்தையும் சேர்த்து வாய்மொழியாக செய்து கொண்ட பாகப்பிரிவினையில் 1789 3/4 சதுர அடியில் 1168 1/4 சதுர அடி இடத்தை தர்மராஜின் பாகத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவருக்கு கிடைத்த 1168 1/4 சதுர அடி இடத்தை 20.05.2005 ஆம் தேதி தர்மராஜ், முருகேசனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார், அந்த பத்திரம் தான் தவறு என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1168 1/4 சதுர அடியில் நான்கு வழிச்சாலைக்கு எடுக்கப்பட்ட நிலம் போக மீதி உள்ள தாவா சொத்து இடத்தை முருகேசன் 03.01.2018 அன்று 3 ஆம் பிரதிவாதி ஜெயபாலகிருஷ்ணன் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், அந்த பத்திரமும் தவறு என்று தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

3 ஆம் பிரதிவாதி ஜெயபாலகிருஷ்ணன் தாவா சொத்தில் 10 x 10 அடியில் RCC கட்டிடத்தை வைத்து கடை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல, அந்த இடத்திற்கு ஜெயபாலகிருஷ்ணன் வரவில்லை. மேற்சொன்ன RCC கட்டிடத்திற்கு மின் இணைப்பு எண்.1006 என்று இணைப்பை தாவா சொத்தில் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து 3 ஆம் பிரதிவாதி ஜெயபாலகிருஷ்ணன் அவரது பெயருக்கு பட்டா எண்.1617 என்று வாங்கியுள்ளாரா என்றால்

வாங்கியுள்ளார், தவறாக வாங்கியுள்ளார். இந்த வழக்குச் சொத்து சர்வே எண்.207/6 என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் தவறாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு சொத்து தொடர்பாக நீங்கள் பிரச்சனை செய்ததால் உங்கள் மீது ஜெயபாலகிருஷ்ணன் அம்பாத்துரை காவல் நிலைத்தில் புகார் கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். அதன்பிறகு 31.08.2019 அன்று தாவா இடத்தில் இருந்த RCC கட்டிடத்தை நீங்கள் இடித்துவிட்டீர்கள் என்றால் இடிக்கவில்லை நாங்கள் இடித்துவிட்டதாக சொல்லி புகார் கொடுத்துள்ளார்கள். ஆறுமுகம் செட்டியார் வாரிசுகளிடமிருந்து 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பிறகு 3 வருடம் கழித்து தான் நீங்கள் கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் சரிதான். உங்களுடைய கிரைய ஆவணத்தில் தர்மராஜுக்கும், சவரியாருக்கும் கிரையம் செய்தது போக மீதமுள்ள 1 ஏக்கர் 12 1/2 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தின் ஒரு பகுதியை 3 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றிருப்பதால் அதைப் பற்றி ஆட்சேபணை தெரிவிக்க உங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, 45 செண்ட்டில் தான் அவர்கள் கிரையம் வாங்கியுள்ளார்கள். நீங்கள் கிரையம் பெற்ற 1 ஏக்க் 12 1/2 செண்ட் இடத்தில் நான்கு வழிச்சாலைக்காக எவ்வளவு இடம் எடுக்கப்பட்டது என்றால் 27 செண்ட் நிலம் எடுக்கப்பட்டது. உங்கள் இடத்தில் இருந்து நான்கு வழிச்சாலைக்கு எடுக்கப்பட்ட நிலம் போக மீதமுள்ள 87 செண்ட் நிலத்தை 04.11.2020 ஆம் தேதி உங்களுடைய மனைவி, மகன், மகள் ஆகியோர்களுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

அந்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் 87 செண்ட்டுக்கு நான்கு எல்லைகள் குறிப்பிடும் போது வழக்கு சொத்திற்கும் சேர்த்து நான்குமால்கள் தவறாக குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் கிரையம் வாங்கிய 1 ஏக்கர் 12 1/2 செண்ட்டிற்கு நான்குமால் குறிப்பிடும் போது, வெள்ளோடு செல்லும் கிழமேல் ரோட்டிற்கும், தர்மர் இடத்திற்கும் தெற்கு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பின்னிட்டு நீங்கள் எழுதிய மேற்சொன்ன தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் நான்கு எல்லையில் கிழமேல் ரோட்டிற்கும், நெடுஞ்சாலைக்கு எடுத்துக்கொண்ட இடத்திற்கும் தெற்கு என்று குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான்.

அரசு நிலம் கையகப்படுத்துவதற்கு முன்பு சர்வே எண்.207/1B1 இல் இருந்த மொத்த இடத்தில் வடமேற்கு மூலையில் தான் முருகேசனுக்கு பாத்தியப்பட்ட இடம் இருந்தது என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்திற்கு தெற்கு புரத்திலும், கிழக்கு புரத்திலும் தான் உங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து இருந்தது என்றால் சரிதான், ரோடு எடுத்ததற்கு பின் இல்லை. முருகேசனுக்கு

பாத்தியப்பட்ட இடத்தில் தாவா சொத்து நீங்களாக மீதமுள்ள மேற்குபக்கமும், வடக்குபக்கமும் இருந்த இடங்கள் தான் நான்குவழி சாலைக்காக ஆர்ஜுதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முருகேசனுக்கு எவ்வளவு இடம் இருந்தது என்றும், அதில் எவ்வளவு இடம் நான்குவழி சாலைக்காக எடுக்கப்பட்டது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் சுமாராக தெரியும். அந்த இடத்தில் இரண்டு செண்டும் , 45 செண்ட் பத்திரத்தில் 4 செண்ட்டும் இருந்தது.

திண்டுக்கல் கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிமன்ற அசல் வழக்கு எண்.250/2011 என்ற வழக்கில் ஜெயபாலகிருஷ்ணனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்கு எண்.250/2011 இல் இந்த வழக்குச் சொத்தை சேர்க்கவில்லை என்றால் சம்மந்தம் இல்லை அதனால் சேர்க்கவில்லை. அசல் வழக்கு எண்.250/2011 இல் நான்னு எல்லையாக முருகேசன் நிலத்திற்கு கிழக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான்குவழி சாலைக்காக எந்த வருடம் நிலம் எடுத்தார்கள் என்றால் 2009 ஆம் வருடம் எடுத்தார்கள்.

அசல் வழக்கு எண்.250/2011 இல் அநத வழக்கு சொத்தின் சர்வே எண்ணாக 207/1B என்று சொல்லப்பட்டுள்ளதா அல்லது 207/1B1 என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சர்வே எண்.207/1B1 என்று சொல்லப்பட்டுள்ளது. நீங்கள் சொல்வது போல் அந்த வழக்கில் சர்வே எண்.207/1B1 என்று சொல்லப்படவில்லை என்றும், சர்வே எண்.207/1B என்று மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்க ஞாபகமில்லை. சர்வே எண்.207/1B எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் 1987-1988 ஆண்டுகளில் உட்பிரிவு செய்யப்பட்டது. இந்த வழக்கில் எந்த எந்த பரிகாரம் கேட்டு நீங்கள் வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 ஆம் பிரதிவாதி, 2 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும், 2 ஆம் பிரதிவாதி 3 ஆம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் தவறு என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் தாவா சொத்து உங்களுக்கு பாத்தியப்பட்டது என்று பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் தெரியாமல் விட்டிருக்கலாம்.

இந்த வழக்கில் உங்கள் மனைவி, மகன், மகள் ஆகியோர்களை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.207/1B2 என்பது காளாஸ்திரி வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.207/1B2 இல் உள்ள சொத்தும், இந்த வழக்கு சொத்தும் வேறு வேறு என்றால் சரிதான், பட்டா தவறுதலாக உள்ளது. அசல் வழக்கு எண்.250/2011 என்ற வழக்கு இந்த வழக்கு சொத்தின் கிழக்குபுரத்தில் உள்ள சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்ததால் அந்த தீர்ப்பு இந்த வழக்கை பாதிக்காது என்றால் சரியல்ல, கட்டுப்படுத்தும்.

எனவே, முருகேசனின் சொத்து நான்குவழி சாலைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்று நீங்கள் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

நீங்கள் உங்களுடைய மனைவி, மகன், மகளுக்கு தானமாக கொடுத்த இடத்திற்கு மேற்கு பக்கத்தில் திண்டுக்கல் - மதுரை தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் சரிதான், வடக்கு பக்கத்தில் வெள்ளோடு ரோடு உள்ளது என்றால் சரிதான், தெற்குபக்கம் காளாஸ்திரி வகையறா நிலம் உள்ளது என்றால் சரிதான், கிழக்கு பக்கம் முத்தம்மாள், தர்மராஜ், பீட்டர் ஆகியோர்களின் நிலம் உள்ளது என்றால் சரிதான்.

3 ஆம் பிரதிவாதி ஜெயபாலகிருஷ்ணனின் நிலத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை மோசடியாக வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

அசல் வழக்கு எண்.250/2011 வழக்கு யார் யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் தர்மராஜ் வழக்கு தாக்கல் செய்தார், என் மீதும், காளாஸ்திரி மீதும் வழக்கு தாக்கல் செய்தார். மொத்தம் எவ்வளவு இடம் நான்குவழி சாலைக்காக எடுக்கப்பட்டது என்றால் 35 செண்ட் எடுக்கப்பட்டது. 35 செண்ட்டில் உங்களுடைய இடம் 27 செண்ட் போக மீதி இடம் யாருடையது என்றால் சவரியார், முருகேசன், தர்மராஜ் ஆகியோர்களிடம் இருந்து எடுக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

உங்களிடம் காட்டப்படும் ஆவணம் தான் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் **(பி.வா.சா.ஆ.1/PW.1)** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor